திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்கின்ற நேரத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் தீ அணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதிலே ஓட்டுநர்களுக்கு சரியான பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அந்தப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த தின விழா.

*வினா எண் 44—திரு. க. பாரமலை: மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கட்டிடத்தில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 3ந் தேதியன்று வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த தினவிழா அரசு விழாவாக நடத்தப்பட்டு அவ்விழா 1976 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அந்த விழாவை தொடர்ந்து நடத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) 1974, 1975 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது. 1976 ஆம் ஆண்டிலிருந்து 1980 வரை நடைபெறவில்லை.

(ஆ) அதன் பின்னர் 1981 ஆம் ஆண்டில் மே திங்கள் 8, 9 ஆகிய தேதிகளிலும் 1982-ல் மே திங்கள் 14, 15 தேதிகளிலும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆண்டுதோறும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தபோது இந்தக் கருத்தை சொன்னார்கள். இந்த விழா தொடர்ந்து நடைபெறும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (பதில் இல்லை)

விளாத்திகுளம் தாலுகா நயினார் சத்திரம் விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான நிலம்.

*வினா எண் 45—திரு. ப. நெடுமாறன்: திரு. க. பாரமலை: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—